V. Thayanusha

உ

சிவமயம்

# கூட்டு வழிபாட்டுப் பாடல்கள்

வேம்படி மகளிர் கல்லூரி

யாழ்ப்பாணம்

1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

V. Thayanusha.

உ

சிவமயம்

# கூட்டு வழிபாட்டுப் பாடல்கள்



வேம்படி மகளிர் கல்லூரி

யாழ்ப்பாணம்

1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறைகள்

## தேவாரம்

(திருஞானசம்பந்தர்)

திருமுறை : 1

பண் : வியாழக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

திருமுறை : 3

பண் : புறநீர்மை

நிரை கழலரவஞ் சிலம் பொலியலம்பு
நிமலர் நீறணி திருமேனி
வரை கொழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரை கெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரை கடலோதம் நித்திலங் கொழிக்கும்
கோணமாமலை யமர்ந்தாரே.

திருமுறை : 3

பண் : கொல்லி

மண்ணினல் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணினல் லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

## திருவாசகம்

(மாணிக்கவாசகர்)

திருமுறை : 8

அன்றே, என் - தன் ஆவியும்,
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னைஆட்
கொண்ட போதே கொண்டிலையோ?
இன்று, ஓர் இடையூறு எனக்கு உண்டோ?
என்தோள் முக் கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணின் நேர் மொழியாள் பங்க! நீ அல்லால்
பற்று நான் மற்று இலேன் கண்டாய்,
திண்ணமே ஆண்டாய், சிவபுரத்து அரசே!
திருப்பெருந்துறை உறை சிவனே!
எண்ணமே, உடல், வாய், மூக்கோடு, செவி, கண்
என்று இவை நின் கண்ணே வைத்து
மண்ணின் மேல் அடியேன் வாழ்கிலேன் கண்டாய்
'வருக' என்று அருள்புரியாயே

நெறி அல்லா நெறி - தன்னை நெறியாக நினைவேனை
சிறு நெறிகள் சேராமே திரு அருளே சேரும் வண்ணம்
குறி ஒன்றும் இல்லாத கூத்தன் தன் கூத்தை எனக்கு
அறியும் வண்ணம் அருளிய ஆறு, ஆர் பெறுவார்? அச்சோவே

**திருவிசைப்பா** **சேந்தனார்**

திருமுறை : 9

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மன மணிவிளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற வெஞ் சிவனைத்
திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிரவென் கண் குளிர்ந்தனவே

**திருமாளிகைத்தேவர்**

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்த தோருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளருள்ளத் தாநந்தக் கனியே
அம்பலமாட ரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்து கந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

**கருவூர்த்தேவர்**

புவன நாயகனே! அகவுயிர்க்கு அமுதே!
பூரணா! ஆரணம் பொழியும்
பவளவாய் மணியே! பணிசெய்வர்க் கிரங்கும்
பசுபதி! பன்னகா பரணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனி ஞாயிறு போன்று அருள்புரிந்து அடியேன்
அகத்திலும் முகத்தலை மூதூர்த்
தவளமா மணிப்பூங் கோயிலும் அமர்ந்தாய்
தனியனேன் தனிமை நீங்குதற்கே

**திருப்பல்லாண்டு** **சேந்தனார்**

திருமுறை : 9

திருச்சிற்றம்பலம்

குழலொலி யாழொலி கூத்தொலி யேத்தொலி யெங்குங் குழாம் பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று விம்மி மிகு திருவாரூரில்
மழவிடையாற்கு வழிவழி யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடி யாரொடுங் கூடியெம் மானுக்கே பல்லாண்டு கூறுதுமே

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்ன நடை மடவாளுமை கோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறி தந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈர்ந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள்
செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே

**திருப்புராணம்** **சேக்கிழார்**

திருமுறை: 12

நன்மை பெரு கருள்நெறியே வந்தணைந்து நல்லூரின்
மன்னுதிருத் தொண்டனார் வணங்கி மகிழ்ந்தெழும் பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் '' என்றவர் தம் '
சென்னிமிசைப் பாத மலர் சூட்டினான் சிவபெருமான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானத்தின் திருவுருவை நான் மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில் வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க் கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டான்

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்றுளாரடி யாரவர் வான் புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்

**திருப்புகழ்** — **அருணகிரிநாதர்**

கருவினுரு வாகி வந்து வயதளவி லேவளர்ந்து
கலைகள் பலவே தெரிந்து மதனாலே
கரிய குழன் மாதர் தங்கள் அடிசு வடுமார் புதைந்து
கவலை பெரி தாகி நொந்து மிகவாடி
அரகரசி வாய வென்று தினமு நினை யாம லின்று
அறுசமய நீதி யொன்றும் அறியாமல்
அசனமிடு வார்கடங்கண் மிளைகடலை வாசல் நின்று
அணுதினமு நாண மின்றி யழிவேனோ
உரகபட மேல் வளர்ந்த பெரிய பெரு மாள ரங்கர்
உலகளவு மால்ம கிழந்த மருகோனே
உபயகுல தீப வங்க விருதுகவி ராஜ சிங்க
உறைபுகலி யூரி லன்று வருவோனே
பரவைமனை மீதி லன்று ஒருபொழுது தூது சென்ற
பரமனரு ளால்வ ளர்ந்த குமரேசா
பகையசுரர் சேனை கொன்று அமரர் சிறை மீள
வென்று பழநிமலை மீதினின்ற பெருமாளே

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரஸ்வதி துதி

## குமரகுருபரர் அருளிய சகலகலாவல்லி மாலை

1. வெண்டாமரைக் கன்றி நின்பதந்
தாங்க வென் வெள்ளை உள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோ?
சகம் ஏழும் அளித்து
உண்டான் உறங்க ஒழித்தான் பித்
தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவை கொள் கரும்பே!
சகல கலா வல்லியே!

2 நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்
பங்கையாசனத்திற்
கூடும் பசும் பொற் கொடியே!
கனதனக் குன்றும் ஐம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே!
சகலகலா வல்லியே!

3. அளிக்கும் செழுந்தமிழ் தெள்ளமு(து)
ஆர்ந்து உன் அருட்கட லில்
குளிக்கும் படிக்கென்று கூடுங் கொலோ?
உளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே!
சகலகலா வல்லியே!

4 தூக்கும் பனுவல் துறை தோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற் கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே!
சகல கலா வல்லியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பஞ்சப் பிதம் தரு செய்ய பொற்
பாத பங்கேருகம் என்
நெஞ்சத் தடத்து அலராத தென்னே?
நெடுந் தாட் கமலத்(து)
அஞ்சத் துவசம் உயர்ந்தோன்
செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவி சொத் திருந்தாய்
சகல கலா வல்லியே!

6. பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுது எளி தெய்த
நல்காய் எழுதா மறையும்
விண்ணும் புவியும் புனலும் கனலும்
வெங் காலு மன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலா வல்லியே!

7. பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனும் என்பாற்
கூட்டும் படி நின் கடைக்கண் நல்காய்
உளம் கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத் தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள் ஓதிமப் பேடே!
சகல கலா வல்லியே!

8. சொல்விற் பனமும் அவதானமும்
கல்வி சொல்ல வல்ல
நல்வித்தையும் தந்து அடிமை கொள்வாய்
நளினாசனஞ் சேர்
செல்விக்கு அரிது என்று ஒரு காலமுஞ்
சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகல கலா வல்லியே!

9. சொற்கும் பொருட்கும் உயிராம்
மெய்ஞ் ஞானத்தின் தோற்றம் என்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்?
நிலந் தோய் புழைக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்குஞ் சரத்தின் பிடியோடு
அரசன்னம் நாண நடை
கற்கும் பதாம் புயத்தாளே
சகல கலா வல்லியே!

10 மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும் என்
பண் கண்டளவிற் பணியச் செய்வாய்!
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி உண்டேனும்
விளம்பில் உன்போற்
கண் கண்ட தெய்வம் உளதோ?
சகல கலா வல்லியே!

★

## சரஸ்வதி அந்தாதி

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய
உருப் பளிங்கு போல்வாளென் உள்ளத்தினுள்ளே
இருப்பள் இங்கு வாராதிடர்

படிக நிறமும் பவளச் செவ்வாயும்
கடிகமழ்பூந் தாமரை போற் கையும் - துடியிடையும்
அல்லும் பகலும் அனவரதமும் துதித்தாற்
கல்லும் சொல்லாதோ கவி

கவியரசர் கம்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரிப் பாட்டு

ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்

மாதா பராசக்தி வையமெல்லாம் நீ நிறைந்தாய்
ஆதாரம் உன்னையல்லால் ஆரெமக்குப் பாரினிலே
ஏதாயினும் வழி நீ சொல்வாய் எமதுயிரே
வேதாவின் தாயே! மிகப் பணிந்து வாழ்வோமே

வாணி கலைத் தெய்வம் மணிவாக் குதவிடுவாள்
ஆணி முத்தைப் போல அறிவு முத்து மாலையினாள்
காணுகின்ற காட்சியாய்க் காண்பதெல்லாம் காட்டுவதாய்
மாணுயர்ந்து நிற்பாள் மலரடியே சூழ்வோமே

பொன்னரசி நாரணனார் தேவி, புகழரசி
மின்னு நவ ரத்தினம் போல் மேனி யழகுடையாள்,
அன்னையவள் வையமெல்லாம் ஆதரிப்பாள் ஸ்ரீதேவி
தன்னிரு பொற் றாளே சரண் புகுந்து வாழ்வோமே

மலையிலே தான் பிறந்தாள் சங்கரனை மாலையிட்டாள்,
உலையிலே ஊதி உலகக் கனல் வளர்ப்பாள்
நிலையில் உயர்த்திடுவாள் நேரே அவள் பாதம்
தலையிலே தாங்கித் தரணிமிசை வாழ்வோமே

மகாகவி பாரதியார்

# ஸ்ரீ காளி தோத்திரம்

யாதுமாகி நின்றாய் காளி எங்கும் நீ நிறைந்தாய்
தீது நன்மை எல்லாம் நின்றன் செயல்களன்றியில்லை
போதும் இங்கு மாதர் வாழும் பொய்மை வாழ்க்கையெல்லாம்
ஆதி சக்தி தாயே என்மீதருள் புரிந்து காப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த நாளும் நின் மேல் தாயே இசைகள் பாடி வாழ்வேன்
கந்தனைப் பயந்தாய் தாயே கருணை வெள்ளமானாய்
மந்த மாருதத்தில் வானில் மலையினுச்சி மீதில்
சிந்தை எங்கு செல்லும் அங்குன் செம்மை தோன்றும் அங்கே

மகாகவி பாரதியார்

# தேவி தோத்திரம்

வாழ்வும் ஆனவள் துர்க்கா வாக்கும் ஆனவள்
வானில் நின்றவள் இந்த மண்ணில் வந்தவள்
தாழ்வு அற்றவள் துர்க்கா தாயுமானவள்
தாபம் நீக்கியே என்னைத் தாங்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

உலகை யீன்றவள் துர்க்கா உமையுமானவள்
உண்மை யானவள் எந்தன் உயிரைக் காப்பவள்
நிலவி நின்றவள் துர்க்கா நித்திய யானவள்
நிலவி நின்றவள் எந்தன் நிதியும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

செம்மை யானவள் துர்க்கா ஜெயமுமானவள்
அம்மையானவள் அன்புத் தந்தையானவள்
இம்மையானவள் துர்க்கா இன்பமானவள்
மும்மையானவள் என்றும் முழுமை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

உயிரு மானவள் துர்க்கா உடலுமானவள்
உலக மானவள் எந்தன் உடமை யானவள்
பயிரு மானவள் துர்க்கா படரும் கொம்பவள்
பண்பு பொங்கி என்னுள் பழுத்த துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பமற்றவள் துர்க்கா துரிய வாழ்பவள்
துறையுமானவள் இன்பத் தோணியானவள்
அன்பு அற்றவள் துர்க்கா அபய வீடவள்
நன்மை தாங்கிட எண்ணுள் நடக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

குருவுமானவள் துர்க்கா குழந்தை யானவள்
குலமு மானவள் எங்கள் குடும்ப தீபமே
இருவு மானவள் துர்க்கா திரிசூலி யானவள்
திரு நீற்றில் என்னிடம் திகழும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

ராகு தேவனின் பெரும் பூஜை ஏற்றவள்
ராகு நேரத்தில் எனைத் தேடி வருபவள்
ராகு காலத்தில் எந்தன் தாயை வேண்டினேன்
ராகு துர்க்கையே என்னைக் காக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

கன்னி துர்க்கையே இதயக் கமல துர்க்கையே
கருணை துர்க்கையே வீர கனக துர்க்கையே
அன்னை துர்க்கையே என்றும் அருளும் துர்க்கையே
அன்பு துர்க்கையே ஜெய துர்க்கை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

## ஓம் சக்தி

நெஞ்சுக்கு நீதியும் தோளுக்கு வாளும்
நிறைந்த சுடர் மணிப் பூண்
பஞ்சுக்கு நேர் பல துன்பங்களாம் இவள்
பார்வைக்கு நேர் பெருந் தீ
வஞ்சனை யின்றிப் பகையின்றிச் சூதின்றி
வையக மாந்த ரெல் லாம்
தஞ்ச மென் றேயுரைப் பீர் அவள் பேர் சக்தி
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளை மலர் மிசை வேதக் கருப்பொரு
ளாகி விளங்கிடு வாய்
தெள்ளு கலைத் தமிழ் வாணி நினக்கொரு
விண்ணப்பஞ் செய்திடுவேன்
எள்ளத் தனைப் பொழுதும் பயனின்று
இராதென் றன் நாவினிலே
வெள்ள மெனப் பொழி வாய் சக்தி வேல் சக்தி
வேல் சக்தி வேல் சக்தி வேல்

**மகாகவி பாரதியார்**

---

# சக்தி நாமவளி

பர்வத ராஜ குமாரி பவானி
பஞ்ஜய க்ருபயா மம துரிதானி''

தீன தயாபரி பூர்ண கடாச்ஷி
த்ரிபுர சுந்தரி தேவி மீனாச்ஷி''

ஆரணி நாரணி காரணி நீலி
பூரணி யோக புராதன சீலி''

சங்கர நாயகி சாந்த மகேஸ்வரி
ஷுந்தரி வேத விசஷணி கௌரி''

அம்பா சிதம்பர நாத நடேஸ்வரி
அம்பள காதலி தேவி ஸர்வேஸ்வரி''

சம்பு மோஹினி காந்த தயாமணி
துக்க பேதினி சோக நிவாரணி''

பஞ்ச தசாஷர பஞ்ஜர வாஸினி
குஞ்சித பாத மஹேச விலாஸினி''

காஞ்சி காமாஷி காசி விசாலாஷி
காருண்ய லாவண்ய அகிலாண்டேஸ்வரி''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்குமி துதி

திருவிளக்கை ஏற்றி வைக்கும் திருமகளே வருக
குலம் விளங்க எங்கள் வீட்டில் கொலுவிருக்க வருக
அலைமகளே வருக ஐஸ்வரியம் தருக (2)

வாசலிலே மாக்கோலம் வீட்டினிலே லஷ்மீகரம்
நெற்றியிலே திரிசூலம் நெஞ்சினிலே லஷ்மீகரம்
அம்மா நீ ஆதரித்தால் அகிலமெல்லாம் இன்பமயம்
அன்றாடம் பாடிடுவோம் அஸ்டலஷ்மி திருநாமம் (2)

மாவிலையும் தோரணமும் மங்களத்தின் அடையாளம்
ஊதுபத்தி எரிவதனால் உள்ளத்திலும் ஒரு வாசம்
அம்மா நீ ஆதரித்தால் அகிலமெல்லாம் அலங்காரம்
அஸ்டமா சித்தியுடன் லோகமெலாம் ஹேமமயம்

சங்கு சக்ர தாரே நமஸ்காரம்
சகல வரம் தருவாய் நமஸ்காரம்
பத்ம பீட தேவி நமஸ்காரம்
பக்தர் தனைக் காப்பாய் நமஸ்காரம்

# இலக்குமி துதி

மடற்கமல நறும் பொகுட்டில் அரசிருக்கும்
செந்துவர் வாய் மயிலே மற்றுன்
கடைக்கணருள் படைத்தன்றோ மணிவண்ணன்
உலகமெலாங் காவல் பூண்டான்
படைத்தனன் நான்முகக்கிழவன் பசுங்குழவி
மதிபுனைந்த பரமன் றானும்
துடைத்தனன் நின் பெருங் கீர்த்தி எம்மனோ
ராலெடுத்துச் சொல்லற் பாற்றோ.

காசிகாண்டம்
அதி வீரராம பாண்டியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சக்திப் பாடல்கள்

ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்

ஸௌந்தரவதனி ஸௌகுண மனோஹரி
மந்த ஹாஸ முக மதிவதனி
சந்தன குங்கும அலங்கார முடனே
தந்திடுவா யுந்தன் தரிசனமே (ஓம்)

நந்திதே வருடன் முனிவரும் பணிய
ஆனந்த முடன் வந்திடுவாய்
வந்தனை செய்து மாயனயனுடன்
வகையாயுன் புகழ் பாடிடவே (ஓம்)

தங்கச் சிலம்பு சலசலவென்றிட
தாண்டவமாடித் தனயன் மகிழ்ந்திட
பொங்குமானந்தமுடன் புவிமேல் விளங்கும்
மங்களநாயகி மகிழ்வாய் வருவாய் (ஓம்)

வேதங்கள் உன்னை வேண்டிப் பாடிட
விரும்பி ஸரஸ்வதி வீணை வாசித்திட
ஸதானந்தமான ஜோதிஸ்வரூபி
ராஜ ராஜேஸ்வரி சரணம் சரணம் (ஓம்)

ஸ்ரீ முருகதாஸ்

★ ★ ★

# சக்தி நாமாவளி

சுத்த சக்தி சுத்த சக்தி சுத்த சக்தி ஓம் சிவம்
சுத்த சக்தி சுத்த சக்தி சுத்த சக்தி ஓம் சிவம்

சத்ய ஞான தர்ம சக்தி சாந்த சக்தி ஓம் சிவம்
சச்சிதானந் தாத்ம சக்தி சர்வசக்தி ஓம் சிவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத சாஸ்த்ர சகலகலா வித்யா சக்தி ஓம் சிவம்
வீர தீர தைர்ய சக்தி விஜய சக்தி ஓம் சிவம்.

நாத கீத கானகலா நடன சக்தி ஓம் சிவம்
மகா மந்ர யந்ர தந்ர வஸ்ய சக்தி ஓம் சிவம்.

யோக போக த்யாக சக்தி லோக சக்தி ஓம் சிவம்
தாக மோக சோகர ஹித தபோ சக்தி ஓம் சிவம்.

துஸ்டசத்ரு நாக சக்தி துர்கா சக்தி ஓம் சிவம்
அஸ்டலக்ஸ்மி ஞான வாணி அமரசக்தி ஓம் சிவம்.

குஞ்சிதபத அபய ஹஸ்த வாஞ்சித பல தாயகம்
குருபர சிவ ஹர ஹர நடராஜ சுத்த சக்தி ஓம்.

சுத்தானந்த பாரதியார்

★ ★ ★

# தேவியின்

## திருநாம அர்ச்சனை (108)

அம்மணீ! ஜக தம்பி கே! கரு
ணாகரீ! பரமேஸ்வரீ!
கண்மணீ! ஜெய கௌரி, காங்கயி
கார்த்திகே! திரி நேத்திரி!
தண்மயீ! உப சாந்தினி! சிவ
சாம்பவீ! ஏகாம்பரீ!
சின்மயீ! சபசிலி, மாலினி,
தேவி, சௌந்தரீ, ஓம் நமோ!

பத்ரகாளி, துர்க்கா, பவாணி
பராசக்தீ, பரி பாலினி
சித் சொரூபிணீ, சிம்ம வாகினி,
திவ்ய ராஜரா ஜேஸ்வரி!
வித்வ பூஷணி, மீன லோசினி,
வீர மர்த்தனி, விமலினி
சத்ய வாசனி, நித்ய கன்னி
தயாபரீ! நம ஓம்நமோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டலீ! சந்திர மண்டலீ! இளங்
கோமளீ! இன்ப ஸ்யாமளீ!
சண்டிகா, சாமுண்டி, பைரவி,
சாவித்திரீ! ஜெய காயத்திரீ
அண்டர் நாயகி, ஆபத் பாந்தவி
அமுத ஞானப யோதரீ
தொண்டர் சாதகி, தூய வானதி
சோம கேசரி, ஓம் நமோ!

சுத்த சக்தி, சுடர் கொடி, திவ்ய
சுந்தரீ; ஸ்ரீபுர ந்தரீ!
வித்தகி! தெய்வ நர்த்தகீ! ஜெய
விஜயி, பாவவி நாசினி,
சித்த ரஞ்சனி, தெய்வ குஞ்சரி
தேவதா, உமா, பார்வதீ!
நித்ய வாணி. நிரஞ்சனீ! மலை
நீலி, சங்கரி' ஓம் நமோ!

சந்திர மௌளி, சரஸ்வதி! திவ்ய
சாரதா! ஜய பாரதீ
சுந்த ராங்கி. சுரநு தாவிஸ்வ.
சோபிதா. சம்ப்ர பாவதீ
மந்த்ர ரூபிணி, மாப சுவதி
மாஹி ஷாசுர மர்த்தனீ
தந்த்ர சாதனி, செஞ்ச டாதரி
சர்வ தாரகி ஓம் நமோ

அஷ்ட லட்சுமி, அபய ஹஸ்தனி,
அமலினீ! செங் கமலினி
நிஷ்டை யோகினி, நிமல வாகினி
நிஷ்க ளங்கசந் யாசினி
துஷ்ட நிக்ர ஹி' தூய வைஷ்ணவி
ஜோதி வேணி, சுமங்கலீ!
சிஷ்ட ரட்சகி, பூர்வ ராகினி,
சீதளீ! நம ஓம் நமோ!

பூரணீ! ஞான பூஷணீ! வேத
போதினீ! தர்ம சாதனீ!
ஆரணீ! நவசீரணீ! உல
காண்டவீ! உக்ர தாண்டவீ!
காரணீ! சிவ காமனீ! ஜீவ
காருணீ ஜகன் மோகினி!
தாரணீ! பவ தாரணீ! புவி
நாயகி! நம ஓம் நமோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளைத் தாமரை வீணையவள்

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளை யின்பங் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ள தாம் பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்;
கள்ள மற்ற முனிவர் கூறுங்
கருணை வாசகத் துட்பொரு ளாவாள் (வெள்ளை)

மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்;
மக்கள் பேசும் மழலையி லுள்ளாள்;
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவை இருப்பிடங் கொண்டாள்;
கோத கன்ற தொழிலுடைத் தாகிக்
குலவு சித்திரங் கோபுரங் கோயில்
ஈதனைத்தின் எழிலிடை யுற்றாள்
இன்ப மேவடி வாகிடப் பெற்றாள் (வெள்ளை)

**மகாகவி சுப்பிரமணிய பாரதியார்**

o o o o o

# சரஸ்வதி நாமாவளி

சரஸ்வதி சரஸ்வதி சௌபாக்கிய தாரிணி சரஸ்வதி
சரஸ்வதி சரஸ்வதி சகல கலைவாணி சரஸ்வதி
தஞ்சமென்று வந்தேன் - சரஸ்வதி
தாவென்று ணர்ந்தாய் சரஸ்வதி
(சரஸ்வதி)

நெஞ்சுருகிப் பாட சரஸ்வதி
நாவிலே நர்த்தனம் செய் சரஸ்வதி
(சரஸ்வதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரத்தி

ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி
ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி
ஜெய ஜெய அனுதினம் பாடிப்பணிந்தோம்
ஜெகமெங்கும் அமைதியைத் தா
— ஓம் ஸ்ரீ ஜெய — — —

திருப்தியும் இன்பமும் வாழ்வில் துலங்க
தேவையெல்லாம் அடைய (மறைய) அம்மம்மா
தேவையெல்லாம் அடைய (மறைய)
பக்தி பெருகிட பாடி உருகிட
பணிப்பாய் அன்பிலெம்மை
— ஓம் ஸ்ரீ ஜெய ... — .

இரண்டுகள் போக மூன்றுகள் அகல
ஈசுவரி வாமருள்வாய் அம்மம்மா
ஈசுவரி வாமருள்வாய்
கரங்குவித்தோம் இனி காலை விடோமடி
கருணையுடன் அணைப்பாய்
— ஓம் ஸ்ரீ ஜெய ......—

காசினி யெங்கும் வேற்றுமை போக
கருத்தினில் அன்பருள் வாய்
அம்மம்மா கருத்தினில் அன்பருள் வாய்
தேசுடன் வாழ காட்டிடுவாய்
ரஹி தேவியுன் அடைக்கலமே
— ஓம் ஸ்ரீ ஜெய ... —

நமஸ் காரம் கூறி கருத்தினில் ஞான
நல் லொளி தீபம் வைத்து அம்மம்மா
நல்லொளி தீபம் வைத்து
நமஸ்காரம் செய்து ஆரத்தி செய்தோம்
ஞாலத்தில் அமைதியைத் தா
— ஓம் ஸ்ரீ ஜெய — — —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீபாராதனை

ஜோதி ஜோதி ஜோதி ஜோதி
ஜோதியே ஜெக ஜோதியே
ஆதி ஆதி ஆதி ஆதி
ஆதியே அருளாதியே

நீதி நிழலில் அன்றும் இன்றும்
நின்றிலங்கும் ஜோதியே
நிமல வடிவில் உலக முழுதும்
நிறைந்த எங்கள் ஜோதியே

அன்பு மயமும் அறிவில் உயர்வும்
ஆத்ம ஞானமும் ஜோதியே
அரிய தபசு புரிய நமதுள்
எரியும் ஜோதி ஜோதியே

திரு பெருகிய அருள் ஒளிமய
தீப ஜோதி ஜோதியே
கிருபை பெருகி குருவருள் பெற
வருக வருக ஜோதியே

## வாழ்த்து

வான் முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன் முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான் மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலக மெல்லாம்

திருச்சிற்றம்பலம்

**கந்த புராணம் - கச்சியப்பர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ விக்னேஸ்வரா அச்சகம்,
150, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org